2017 மார்ச் 24]

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள். ஒரு நிமிடத்தில் சொல்ல வேண்டும். விவாதம் எல்லாம் இல்லை, சொல்லுங்கள்.

*__திரு. உ. மதிவாணன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் உள்ள சிறு சிறு பெட்டிக்கடைகளில் Hans எனப்படும் புகையிலை மறைமுகமாக விற்பனை செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான இளைஞர்கள் இதைப் பயன்படுத்தியதால் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் நிறைய பாதிப்புகள் ஏற்பட்டு, cancer வியாதி வருவதாகவும் மருத்துவர்கள் சொல்கிறார்கள். எனவே, Hans புகையிலை விற்பனையைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

*__திரு. கே.எஸ். மஸ்தான்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 55–ன்கீழ் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, மழவந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த பூபாலன், கூலி வேலை செய்து பிழைப்பதற்காக சென்னை, K.K. நகரில் உள்ள M.G.R. நகர் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தில் தூர்வாரும் பணி செய்யும்போது மணல் சரிந்து காலமானார். இவருக்கு தமிழக அரசு நிதி உதவியும், அவர் மனைவிக்கு அரசு வேலையும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு.கே.எஸ்.மஸ்தான், போதும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள், கவனத்திற்குக் கொண்டுவந்துவிட்டீர்கள் அல்லவா? அது record ஆகிவிட்டது, அதைப் பார்த்துக்கொள்வார்கள்,

உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள அமராவதி அணையிலிருந்து குடிநீருக்காக பிரதான கால்வாயில் 8 தினங்களுக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்றும், அதேபோல அமராவதி அணையின் நீர்வரத்தான பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு பட்டிச்சேரி என்னும் இடத்தில் அனுமதியின்றிக் கட்டும் தடுப்பணையைத் தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்,* record *செய்துவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி எழுந்து நின்றார்.)

முற்பகல் 10–15

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைப் பகுதியான பார்வதிபுரம் மற்றும் மார்த்தாண்டத்தில் மேம்பாலப் பணி நடைபெற்று வருகிறது. அதனால் போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமாக இருக்கிறது. மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் நடைபாதை மற்றும் மாற்றுப் பாதையை உடனடியாக அமைத்துத் தர வேண்டுமென அரசின் கவனத்தை ஈர்த்து, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) பேசாமல் இருங்கள். உறுப்பினர்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்புகளுக்கெல்லாம் பதிலளிக்கக் கோரி சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. பதில் கிடைத்தவுடன் உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். யாரும் பயப்பட வேண்டாம். உட்காருங்கள்.*